

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (26.4.2025) தலைமைச் செயலகத்தில், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு 2025–2026 ஆம் ஆண்டிற்கான நிதித்துறை, ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியகால நன்மைகள் மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வின்போது, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், சிறப்பு செயலாளர்கள் பிரசாந்த் மு. வடநெரே, அருண் சுந்தர் தயாளன், துணைச் செயலாளர் செ.ஆ. ரிஷப், கருவூலம் மற்றும் கணக்குகள் துறை இயக்குநர் திருமதி தி. சாருஸ்ரீ மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (26.4.2025) தலைமைச் செயலகத்தில், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு 2025–2026 ஆம் ஆண்டிற்கான நிதித்துறை, ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியகால நன்மைகள், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (26.4.2025) தலைமைச் செயலகத்தில், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன் 2025–2026 ஆம் ஆண்டிற்கான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வின்போது, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திருமதி க.லட்சுமி பிரியா, தாட்கோ தலைவர் நா. இளையராஜா, ஆதிதிராவிடர் நலத் துறை ஆணையர் த.ஆனந்த், தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி, பழங்குடியினர் நல இயக்குநர் எஸ்.அண்ணாதுரை, சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு காவல்துறை தலைவர் மரு. மகேந்திர குமார் ரத்தோட் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (26.4.2025) தலைமைச் செயலகத்தில், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன் 2025–2026 ஆம் ஆண்டிற்கான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

## இந்திய குடிமைப் பணித் தேர்வில் வெற்றி பெற்ற

# 50 மாணவ - மாணவியர்க்கு பாராட்டுச் சான்றிதழ்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, ஏப். 27 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (26.4.2025) சென்னை, அண்ணா நிருவாக பணியாளர் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், “நான் முதல்வன்” திட்டம் மற்றும் தமிழ்நாடு அரசால் நடத்தப்பட்டு வரும், அகில இந்திய குடிமைப் பணித் தேர்வு பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்று இந்திய குடிமைப் பணி தேர்வில் வெற்றி பெற்ற 50 மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி வாழ்த்தினார்.**

**அகில இந்திய குடிமைப் பணித் தேர்வு பயிற்சி மையம்**

சென்னை, பசுமைவழிச் சாலையில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசால் நடத்தப்பட்டு வரும் அகில இந்திய குடிமைப் பணித் தேர்வு பயிற்சி மையத்தில், அகில இந்திய குடிமைப் பணிகளுக்கான முதல்நிலை மற்றும் முதன்மைத் தேர்வுகளை எதிர்கொள்ளும் ஆர்வலர்களுக்கு பயிற்சி வகுப்புகள், உணவு மற்றும் தங்குமிடத்துடன் நடத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக, கிராமப்புறங்களில் உள்ள ஏழை எளிய மாணவ, மாணவியர்களுக்கு பயனளிக்கும் வகையில் இப்பயிற்சி மையம் கடந்த 58 ஆண்டுகளாக இயங்கி வருகிறது.

2024–ஆம் ஆண்டுக்கான குடிமைப் பணி முதன்மைத் தேர்விற்கு 216 ஆர்வலர்கள் (Aspirants) முழுநேரமாக இம்மையத்தில் பயிற்சி பெற்றார்கள். படிப்பு ஊக்கத் தொகையாக மாணவர் ஒருவருக்கு மாதம் ரூ.3000/- வீதம் மூன்று மாதங்களுக்கு மொத்தம் ரூ.9000/- வழங்கப்பட்டது. இவர்களுள் முதன்மைத் தேர்வில் 48 ஆர்வலர்கள் தேர்ச்சி பெற்றார்கள். முதன்மைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற ஆர்வலர்களுக்கான மாதிரி ஆளுமைத் தேர்வு இப்பயிற்சி மையத்தால் நடத்தப்பட்டது. மேலும், புதுதில்லியில் நடைபெற்ற ஆளுமைத் தேர்வில் கலந்து கொள்ள ஆர்வலர்களுக்கு தலா ரூ.5000/- வழங்கப்பட்டது.

மேலும், இம்மையத்தின் மூலம் புதுதில்லியில் நடைபெறும் ஆளுமைத் தேர்வில் கலந்து கொள்ளும் ஆர்வலர்களுக்கு ரூ.5,000/- வீதம் வழங்கப்பட்டு வந்த நிலையில், 2025-26ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், பயணச் செலவு மற்றும் சிறப்புப் பயிற்சிகளுக்கான ஊக்கத் தொகை ரூபாய் 50,000 என உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**“நான் முதல்வன்” திட்டத்தில் பயின்றவர்களுக்கு ஊக்கத்தொகை**

2023-2024-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், குடிமைப் பணிகள் தேர்விற்கு பயிற்சி பெறும் மாணவர்களுக்கு மேம்பட்டப் பயிற்சி மற்றும் பயிற்சிப் பொருட்கள் வழங்கும் திட்டத்தை அண்ணா நிருவாகப் பணியாளர் கல்லூரியுடன் இணைந்து தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் செயல்படுத்தும் என்றும், ஒவ்வொரு ஆண்டும் மதிப்பீட்டுத் தேர்வு மூலம் 1,000 மாணவர்கள் தேர்வு செய்யப்படுவார்கள் எனவும், தேர்வு செய்யப்பட்ட மாணவர்கள் முதல்நிலை தேர்விற்கு தயாராகுவதற்காக மாதத்திற்கு 7,500 ரூபாய் வீதம் 10 மாதங்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படும் என்றும், முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெறுவோருக்கு 25,000 ரூபாய் ஊக்கத்தொகையாக வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

அதன்படி, “நான் முதல்வன்” திட்டத்தின் கீழ் பொது நுழைவுத் தேர்வு மூலம் தேர்வு செய்யப்படும் தகுதியுடைய ஆர்வலர்களுக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.7,500/- வீதம் 10 மாதங்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. 2023-ஆம் ஆண்டு முதல் முதன்மைத் தேர்வு பயிற்சி பெறும் ஆர்வலர்களுக்கு 25,000 ரூபாய் ரொக்கமாக இத்திட்டத்தின் மூலம் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

நான் முதல்வன் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற 1000 ஆர்வலர்களில் 276 ஆர்வலர்கள் முதன்மை தேர்வில் தேர்ச்சி பெற்றனர். அதில் ஆளுமை தேர்விற்கு 134 ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.

அகில இந்திய குடிமைப் பணித் தேர்வு பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்றவர்கள் மற்றும் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்றவர்களில் இறுதியாக 50 மாணவ, மாணவியர்கள் அகில இந்திய குடிமைப் பணி தேர்வில் வெற்றி பெற்றுள்ளார்கள்.

இதில், அகில இந்திய குடிமைப் பணித் தேர்வு பயிற்சி மையத்தில் முதன்மைத் தேர்வுக்கு தங்கிப் பயின்ற ஆர்வலர்களான பா. சிவச்சந்திரன் என்பவர் அகில இந்திய அளவில் 23-வது இடத்தையும், மாநில அளவில் முதலிடத்தையும், செல்வி. ர. மோனிகா என்பவர் அகில இந்திய அளவில் 39-வது இடத்தையும், மாநில அளவில் 4-வது இடத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளனர். இதில் தமிழ் வழியில் தேர்வு எழுதிய சு. சங்கர்பாண்டியராஜ் மற்றும் மாற்றுத்திறனாளி ப. காமராஜ் ஆகிய இரண்டு பேர் அடங்குவர். மேலும், வெற்றி பெற்றவர்களுள் 11 பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய குடிமைப் பணி தேர்வில் வெற்றி பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த அனைத்து வெற்றியாளர்களுக்கும் இன்றையதினம் அண்ணா நிருவாகப் பணியாளர் கல்லூரியில் முதலமைச்சர் அவர்கள் தலைமையில் பாராட்டு விழா நடத்தப்பட்டு, சான்றிதழ்கள் மற்றும் நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சி யில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், அண்ணா நிருவாக பணியாளர் கல்லூரியின் கூடுதல் தலைமைச் செயலாளர் / பயிற்சித் துறை தலைவர்

விக்ரம் கபூர், மனிதவள மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் கோ. பிரகாஷ், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் கிராந்தி குமார் பாடி, நான் முதல்வன் போட்டி தேர்வு சிறப்பு திட்ட இயக்குநர் சி. சுதாகரன், IRPS மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நீலகிரி மாவட்டம், உதகைக்கு நேற்று முன்தினம் (25.04.2025) வருகை புரிந்த இந்திய குடியரசு துணைத் தலைவர் ஜெகதீப் தன்கர் அவர்களுக்கு நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா அவர்கள் புத்தகம் வழங்கி வரவேற்றார்.

## சிவகங்கை மாவட்டம்

# சிங்கம்புணரி சேர்மன் ந.அம்பலமுத்து இல்லத் திருமண விழா!

## அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் - பிரேமா பெரிய கருப்பன் தலைமையில் நடைபெறுகிறது!

*சிவகங்கை, ஏப். 27 -*

சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், ஹெட்மன் இரா.நடராஜன் அம்பலம் - பூரணம் அம்மாள் ஆகியோரின் மகன் வழிப்பேரனும், சிங்கம் புணரி வட்டம், சந்தி இரா.சேது அம்பலம் மாலதி ஆகியோரின் மகள் வழிப் பேரனும் ந.அம்பலமுத்து- மிதிலாதேவி ஆகியோரின் புதல்வனுமான அ.நடராஜனுக்கும் சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம் சந்தி இரா. சேசு அம்பலம் - மாலதி அம்மாள் ஆகியோரின் மகன் வழிப் பேத்தியும், சிங்கம்புணரி சே.ஜெகதீசன் அம்பலம் -சுந்தரமீனா ஆகியோரின் மகள் வழிப் பேத்தியும் சந்தி சே. இளமாறன் - சுகன்யா, (எ) பவானி ஆகியோரின் புதல்வியுமாகிய இ. நந்தனா வுக்கும் மணவிழா 09.05. 2025 - வெள்ளிக்கிழமை அன்று காலை 9 மணியளவில் சிங்கம்புணரி, மணப்பட்டி காந்திமதி கோல்டன் பேலஸில் கூட்டுறவுத்துறை அமைச்சர், மாவட்டக் கழகச் செயலாளர் கே.ஆர். பெரியகருப்பன், பிரேமா பெரியகருப்பன் ஆகியோர்



தலைமையில் நடைபெறுகிறது.

மணவிழாவிற்கு முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், இராம.அருணகிரி, கே.பி.நவநீதி கிருஷ்ணன், த.சேங்கைமாறன், எம். வெற்றிச்செல்வி, டாக்டர் ஆர்.முருகன், பி.அமலநாதன், எம்.பூமிநாதன், எம். ராஜா முகமது, இந்தியன் டி.செந்தில்குமார், ஆர். சிவகுமார், ஆர்.எம். எஸ். சரவணன், ஹாஜி. ஏ.எம். முகமது உசேன், சி.வெங்கட்ராமன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

நகரச் செயலாளர் டி. கதிர் வேல் வரவேற்கிறார். சிவபுரி எஸ்.சேகர் நன்றி கூறுகிறார்.

மணவிழாவில் அ.கணேசன், அஞ்சப்பர் ஜெயராமன், பூரண சங்கீதா, எம். சோமசுந்தரம், ஏ.பாஸ்கரன், பி.ஆர்.பெருமாள், எஸ்.சண்முகவடிவேல், கே.பால சுப்பிரமணியன், கதி.ராஜ்குமார், கே.எஸ். நாராயணன், என்.எம். சுரேஷ், ஆர்.புகழேந்தி, க. செந்தில் கிருஷ்ணன், கரு. சண்முகம், எம்.பிரகாஷ், ஏ.எல்.சந்திரன், ஆபிள்முராதுகான், ஆர்.ராஜாங்கம், எஸ்.முத்துக்குமார், எஸ். பி. சுப்பிரமணியன், டாக்டர். இ.அருள்மணி நாகராஜன், எஸ்.நாகராஜன், ஆர்.ஆனந்த், ஜி.ராஜமூர்த்தி, ஜி.மருது பாண்டியன், கே.முருகேசன், எஸ். எம்.எஸ்.ராஜ்குமார், கே. கே.கரந்தமலை, ப.கதிர் காமம், குடோன் பாண்டி, டி.சி.என்.ஞானசேகரன், சி.தனுஷ்கோடி, ஏ.மனோகரன், சி.பூமிநாதன், சி. சின்னையா, ஷீலா சொக்கநாதன், எஸ்.கல்யாணசுந்தரம், எம்.எஸ்.ஒய்.அலாவுதீன் யாகூப், லோகநாதன், ஆ.சையது, அக்ரி கே.ஆர். சுப்பிரமணியன், கே அருண் பிரசாத் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர, கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.



ஒருங்கிணைந்த கோவை மாவட்ட கழகத்தின் சார்பில் மகளிர் அணி, மகளிர் தொண்டரணி ஒன்றிய, நகர, பேரூர், பகுதிக்கழக நிர்வாகிகள் அறிமுக பாசறைக் கூட்டம் கோவை, முதலிபாளையம், எம்.என்.சி.ஆர். கிராண்ட் பேலஸ் அரங்கில் கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் தலைமையில் கோவை மாநகர் மாவட்டச் செயலாளர், நா.கார்த்திக், தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன், வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச்செயலாளர், கனிமொழி கருணாநிதி எம்.பி., திராவிட இயக்க தமிழர் பேரவை தலைவர், பேராசிரியர் சுப.வீரபாண்டியன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதில் கழக மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன், கழக மகளிர் தொண்டரணிச் செயலாளர், மேற்கு மண்டல மகளிர் அணி பொறுப்பாளர் நாமக்கல் ப.இராணி, கழக மகளிர் அணி பிரச்சாரக்குழுச் செயலாளர், ஒருங்கிணைந்த கோவை மாவட்ட மகளிர் அணி பொறுப்பாளர் செ.உமாமகேஸ்வரி, கழக மகளிர் தொண்டரணி இணைச் செயலாளர் தமிழரசி ரவிக்குமார், கழக மகளிர் தொண்டரணி துணை செயலாளர்கள் நா.மாலதி நாகராஜ், சத்யா பழனிக்குமார், முனைவர். கணபதி ராஜ்குமார் எம்.பி., கே.ஈஸ்வரசாமி எம்.பி., உள்பட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி கழக மகளிர் அணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.